ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 4 | ஜூலை 1999 | கானம் : 12

# செய்திகள்

**மே 30-ந் தேதி - ஸ்ரீ மஹாபெரியவாளின் 106வது ஜயந்தி மஹோத்ஸவம்**

சென்னை ப்ரேமிகபவனத்தில் காலை 5 மணியளவில் கணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், ஆவஹந்தி ஹோமம் நடைபெற்றது.

மதியம் அஷ்டபதி பஜனையும் மாலையில் தேவார பஜனையும் நடைபெற்றது. இரவு 7 மணியளவில் ஸ்ரீ மஹாபெரியவாள் திருவுருவ புறப்பாடு நடைபெற்றது. அதிர்வேட்டுடனும் வாண வேடிக்கையுடனும், யானை, பஜனை கோஷ்டியின் முன்னால் செல்ல, மஹாபெரியவாள் திருஉருவப்படம் சத்ர, சாமரத்துடனும், பக்தர்களுடனும் ஜாபர்கான்பேட்டை, பாரதிதாசன் காலனி வீதிகளில் வலம் வந்தது.

**மே 30-ந் தேதி காலை 10 மணி**

சென்னை, மயிலாப்பூர் ரமண கேந்திராவில் The Centenarian Trust, Chennai அவர்கள் நடத்திய ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்தி மஹோத்ஸவத்தில் நம் ஸ்வாமிகள் கலந்துகொண்டு, ஸ்ரீ மஹாபெரியவாள் பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.

**ஜூன் 6-ந் தேதி மாலை 6 மணி**

சென்னை, மயிலாப்பூர், ரமணகேந்திராவில் Dr. P.K. ஸுந்தரம் அவர்கள் எழுதி வானதி பதிப்பகத்தார் வெளியிட்ட கேனோபநிஷத் மற்றும் ஈஶாவாஸ்ய உபநிஷத் தமிழாக்க புத்தக வெளியீட்டு விழாவில் நம் ஸ்வாமிகள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**ஜூன் 6-ந் தேதி இரவு 9 மணி**

சென்னை, வடபழனி ஸ்ரீகோபாலக்ருஷ்ணன் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற நாம ஸங்கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

**ஜூன் 10-ந் தேதி**

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஏகாதஶியை ஒட்டி, அஷ்டபதி பஜனையும் இரவில் அபங்க திவ்யநாமமும் நடைபெற்றன.

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 4 ஜுலை 1999 கானம் : 12

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 44 | 4 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 26 | 8 |
| 5. | சொல்லின் செல்வன் - 1 | 10 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 14 | 17 |
| 7. | மனஇறுக்கம் - 2 | 22 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 20 | 26 |
| 9. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 24 | 28 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 47 | 29 |



ஸோம்நாத் கோமதி நதி ஸங்கமத்தில்
ஸ்வாமிகளும், பக்தர்களும் ஸங்கல்பம் செய்யும் காட்சி.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : கல்யாணி தாளம் : த்ரிபுடை

பல்லவி

*வாணி நமோSஸ்துதே*
*வீணாபாணி நமோSஸ்துதே (வாணி)*

அனுபல்லவி

*சதுர்புஜரூபிணி சதுர்முகபத்னீ*
*சதுர்வேத ஸ்வரூபிணி சதுர்வர்ணபாலினி (வாணி)*

சரணம்

*ஸகல வித்யா ஆதார ஸ்வரூபிணி*
*ஶுப்ரசுத்த வேத வஸ்த்ரதாரிணி*
*ஸ்படிகமாலா த்ருத நாரத ஜனனி*
*ஸ்மித முரளீதர வாக் விலாஸினி (வாணி)*

To know more about mission activities and satsang events visit :

http://members.tripod.com/~madhuramurali

The Spiritual Magazine in English "Madhura Murali" is also available on Web.

ஒரு ஸமயம், நம் ஸ்வாமிகள் ஸ்ரீ மஹாபெரியவாளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு ஸமயம் மஹாபெரியவாள் சில நாட்கள் பிக்ஷை எடுத்துக்கொள்ளாமல் விரதம் இருந்தார்கள். பக்தர்கள் அதற்கான காரணத்தை அவரிடம் வினவினர். அதற்கு ஸ்ரீ மஹாபெரியவாள், "அம்பாளின் நைவேத்தியத்திற்கு சர்க்கரைப்பொங்கல் செய்து வைத்திருந்தார்கள். அதன் மணத்தைக் கண்டு, அதைச் சாப்பிடும் ஆசை வந்துவிட்டது எனக்கு. அம்பாளுக்கு நைவேத்தியம் செய்யவைத்துள்ள ஒரு வஸ்துவிடம் எனக்கு இப்படி ஆசை வந்துவிட்டதே என்று எனக்கு நானே தண்டனை கொடுத்துக் கொண்டேன். அதற்காகத்தான் இப்படி பட்டினி கிடந்தேன்" என்று கூறினார்கள்.

நம் ஸ்வாமிகள் இதை உருக்கமாக வர்ணித்துக் கொண்டிருக்கும்பொழுது, இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு அன்பர், "இதை மஹாபெரியவாள் வெளிப்படுத்த வேண்டிய அவச்யம் என்ன? இப்படி வெளிப்படுத்துவது தன்னுடைய நிலையை ப்ரகடனப்படுத்துவதாக ஆகாதா?" என்று வினவினார்.

அதற்கு ஸ்வாமிகள், "வேதம், இதிஹாஸம், புராணம், மஹான்கள் சரித்திரம் போன்றவைகளை குதர்க்க புத்தியுடன் பார்க்கக் கூடாது. இருந்தாலும் நீங்கள் கேள்வி கேட்டுவிட்டதால் பதில் சொல்கின்றேன். அப்படி அவருடைய நிலையை ப்ரகடனப்படுத்த வேண்டிய அவச்யம் அவருக்கு இருந்தது. ஏன் என்றால் அவருடைய கைங்கர்யத்தில் ஈடுபட்டு வந்த பல அணுக்க தொண்டர்கள், தாங்கள் ஏதோ தவறு இழைத்துவிட்டோம், அதனால்தான் மஹாபெரியவாள் தன்னை தண்டித்து கொள்கின்றார் என்று நினைத்து வருந்தினார்கள். அவர்களுடைய மனதிற்கு ஸமாதானம் ஏற்பட வேண்டுமானால் காரணத்தை சொல்ல வேண்டும். மஹாபெரியவாள் ஸத்யத்தை தவிர வேறு எதுவும் பேசி அறியாதவர், ஆகையினால் அப்படியே அதற்கான காரணத்தை சொல்லிவிட்டார். தன்னைப்பற்றி, மற்றவர்கள் தவறாக நினைத்தாலும் பரவாயில்லை. தன்னுடைய அணுக்கத் தொண்டர்களின் மனது புண்படக்கூடாது என்ற அவரது உயர்ந்த குணத்தையே இந்த ஸம்பவம் காட்டுகின்றது" என்று அழகாக சுவைபட எடுத்துக் கூறினார்கள்.

(தொடரும்)

– ஜயந்தி ஜானகிராமன்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : ப்ராணனுடைய உற்பத்தி ஸ்தானமும் மனதின் உற்பத்தி ஸ்தானமும் ஒன்று. மனது அடங்கினால் ப்ராணன் அடங்கும். ப்ராணன் அடங்கினால் மனது அடங்கும். ஆனால் மனம் அழிந்த ஞானிக்கும் விதேஹமுக்தி அடையும்வரை ப்ராரப்த வசத்தினால் ப்ராணன் ஓடிக்கொண்டிருக்கும் என்று கூறுகின்றீர்கள். ஆனால் அவருக்குத்தான் மனது என்ற ஒன்று இல்லையே! பின் ப்ராணன் எப்படிக் கிளம்பும்?*

ஸ்ரீஸ்வாமிகள் : ஒரு அடி பம்பு இருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு முறை அடிக்கும்பொழுதும் பம்ப்பானது நிலத்தில் உள்ள நீரை மேலே கொண்டு வருகின்றது. அடிப்பதை நிறுத்திவிட்டால் நிலத்தடியில் நீர் இருந்தாலும் மேலே வருவது இல்லை. நிலத்தடி நீர் வற்றிவிட்டாலும் நம்மால் பம்பை அடிக்கமுடியும். ஆனால் நீர் மேலே வராது. அதுபோல், மனம் அழிந்த ஞானிக்கு ப்ராணனின் ஸஞ்சாரம் இருந்தாலும் மனது எழும்பாது.

*கேள்வி : நான் உங்களைப் பார்க்க வந்தவுடன், இப்பொழுதுதான் உங்களைப் பற்றி நினைத்தேன், உடனே வந்துவிட்டீர்கள் என்று கூறினீர்கள். இப்படி பல பேரிடம் கூறுகின்றீர்கள். எப்பொழுதும் உன்னைப் பற்றிய சிந்தனைதான் என்றெல்லாம் கூறுகின்றீர்கள். இதெல்லாம் உபச்சார வார்த்தைகளோ என்று என் மனம் நினைக்கின்றது? இது சரியா?*

பதில் : நீங்கள் கூறுவது தவறு. ஒரே ஸமயத்தில் பலரையும் என்னால் நினைத்துக் கொள்ளமுடியும். ஸாதாரண பாத்திரத்தில் சிறிதளவு பொருள்களே கொள்ளும். மிகவும் பெரியது என்றால் அதற்குத் தகுந்த அளவிற்கு பொருட்களை கொள்ளும். அதுபோல் மஹான்களுடைய மனதில் ஒரே நேரத்தில் பலரையும், பல நினைவுகளையும் கொள்ள முடியும்.

*கேள்வி : பக்தி மார்க்கத்தில் செல்கின்றவர்கள் கர்மானுஷ்டானம் செய்கின்றவர்களிடமும், வேதாந்த விசாரணை, யோக ஸாதனை செய்பவர்களிடமும் உள்ள தோஷங்களை எடுத்துக் காட்டி பரிகசிக்கின்றார்களே! பக்தி மார்க்கத்தில் செல்பவர்களிடம் மட்டும் தோஷங்களே இல்லையா?*

பதில் : கர்ம, யோக, ஞான மார்க்கங்களை காட்டிக்கொடுத்தவர்களே இந்த மார்க்கங்களை அந்தந்த விதிப்படி அனுசரித்தால்தான் பலன் தரும் என்றும், தோஷத்துடன் அனுஷ்டித்தால் விபரீத பலன்கள் ஏற்படும் என்றும் கூறியுள்ளார்கள். ஆனால், பக்தி க்ரந்தங்களோ, பரிகாசமாகவோ, ஏளனமாகவோ, ஸங்கேதமாகவோ கூட பகவந் நாமாக்களை உச்சரித்து விட்டாலும் போதும்; பூரண பலன் ஏற்படும் என்று கூறியுள்ளது. பகவானும் கீதையிலும் என்னிடம் ஒருவன் உண்மையாக பக்தி செய்வானாகில் அவனிடம் எவ்வளவு குறைகள் இருந்தாலும் அவன் என் பக்தனே. அவனை விரைவில் தர்மாத்மாவாக மாற்றிவிடுவேன் என்று கூறியுள்ளார். பக்தர்கள் ஒருகாலும் நாசமடைவதில்லை.

*கேள்வி : குழலூதுவது போல் க்ருஷ்ணன் படத்தை வீட்டில் வைத்துக் கொள்ளலாமா? சிலர் அப்படி வைத்துக்கொண்டால் வீடே ஊதிவிடும் என்கின்றார்களே?*

பதில் : ஏன் அதோடு மட்டும் நிறுத்திக் கொண்டீர்கள்? மலையை தூக்கும் ஹனுமாரை வைத்துக்கொண்டால் வீட்டையே தூக்கிவிடும்; பிள்ளையாரை வைத்துக் கொண்டால், வீட்டில் உள்ள ஆண்பிள்ளைக்கு கல்யாணம் ஆகாது; கன்யாகுமரி அம்மன் படத்தை வைத்துக்கொண்டால் பெண் குழந்தைக்கு கல்யாணம் ஆகாது; நரஸிம்மர் படம் வைத்துக்கொண்டால் வீடு பிளந்துவிடும்; ராமர் படத்தை வைத்துக்கொண்டால் உங்கள் மனைவியை யாராவது தூக்கிக்கொண்டு சென்றுவிடலாம்; இப்படி பல கற்பனைகளை சொல்லிக்கொண்டே போகலாம். இவையெல்லாம், பொழுது போகாமல் சிலர் கிளப்பிவிடும் புரளியே ஆகும்.

*கேள்வி : உங்களுடைய உபதேச மொழி ஒன்றில் கஷ்டம் வந்தால் மனைவியோ, குழந்தைகளோ, குடும்பமோ வேண்டாம் என்று தோன்றவில்லை. ஆனால் ஸத்ஸங்கம், குரு, இவையெல்லாம் வேண்டாம் என்று தோன்றுகிறது. இதற்கு காரணம், இவைகள் ஒருவருக்கு Least Importantஆக இருப்பதுதான் என்று கூறியுள்ளீர்கள். இதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. தெய்வ கார்யங்களில் ஈடுபடும்பொழுது ஏதோ ஒன்றை எதிர்பார்த்துதானே அந்த கார்யங்களைச் செய்கின்றோம். பலன் கைகூடாதபொழுது அவைகள் வேண்டாம் என்று தோன்றுவதில் தவறு என்ன?*

பதில் : மனைவி, குழந்தை, குடும்பம், எல்லாவற்றிலும், எல்லோரிடமும் கூடத்தான் உங்களுக்கு பல எதிர்பார்ப்புகளும் இருக்கின்றன. ஆனால், உங்களுடைய எதிர்பார்ப்புக்குத் தகுந்தபடி அவர்கள் நடந்து கொள்ளாவிட்டாலும் கூட அவர்களை விடமுடியாமல் தவிப்பது அவர்களிடம் உள்ள பாசம்தான் காரணம். அத்தகைய பற்றாவது இறை விஷயங்களில் இருக்கவேண்டும் என்று நான் கூறியதில் தவறு ஒன்றும் இல்லையே!

*கேள்வி : தெய்வீக விஷயங்களை வலுக்கட்டாயமாக ஏன் ஒருவரிடம் திணிக்க வேண்டும்?*

பதில் : தாயார் கசப்பு மருந்தை, ஒரு குழந்தை சாப்பிட மறுத்தாலும் எப்பாடுபட்டாவது போட்டுவிடுவது இல்லையா. அதுபோல் நல்ல விஷயங்களை பிறருக்கு வலுக்கட்டாயமாக திணிப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

*கேள்வி : இன்றைய கால கட்டத்திலும் பல தர்ம கார்யங்கள் நடைபெற்றுக் கொண்டுதானே வருகின்றன!*

பதில் : இன்றைய கால கட்டத்திலும் பல கார்யங்கள் நடைபெறுவதாக வேண்டுமானால் சொல்லலாம். ஏன் என்றால், நடைபெறும் பல கார்யங்கள் தர்ம வழிகளில் இல்லை. ■

# வேத கதைகள் - 26

- தர்மக்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஶாஸ்த்ரிகள்

## கதிரவனின் தோற்றம்

கஶ்யபர் என்ற ஒரு மஹரிஷி இருந்தார். அவருக்கு இரு மனைவிகள். அதிதி, திதி என்று பெயர். பூமிதான் அதிதி என்று வேதம் கூறுகிறது. ***இயம்வா அதிதி:*** இயம் என்ற சொல் பூமியை குறிக்கும். ஒரு ஸமயம், அதிதியானவள் பிள்ளையை விரும்பியவளாக ஸாத்யர்கள் என்ற தேவர்களுக்கு ப்ரஹ்ம ஓதனம் என்ற ஹவிஸ்ஸை அளித்தாள். வைதிகமான அக்னியில் சமைக்கப்பட்ட ஒரு ஹவிஸிற்கு ப்ரஹ்ம ஓதனம் என்று பெயர். தேவர்கள் அதிதியினால் அளிக்கப்பட்ட அன்னத்தை உண்டு மீதியை அவளுக்கு அளித்தனர். அதை அவளும் உண்டாள். அதனால் அவளுக்கு கர்ப்பம் ஏற்பட்டது. அவளுக்கு ஆதித்யர்கள் என்ற நான்கு பிள்ளைகள் பிறந்தனர்.

மறுபடியும் பிள்ளைகளை விரும்பிய அதிதியானவள் முன்போல் இந்த ப்ரஹ்ம ஓதனம் என்ற அன்னத்தை சமைத்தாள். தேவர்களுக்கு அளிப்பதற்கு முன் ஆலோசனை செய்யலானாள். தேவர்களுக்கு அளித்த மீதியை உண்டதாலேயே இந்த நான்கு பிள்ளைகள் உயர்ந்தவர்களாக பிறந்து இருக்கிறார்கள். ஆதலால் தேவர்களுக்கு அளிக்காமல் தானே முதலில் இதை புஜித்தால் முன் பிறந்த நான்கு பிள்ளைகளைக் காட்டிலும் பலம், செல்வம், அறிவு இவைகளில் மிகவும் உயர்ந்த பிள்ளைகள் பிறப்பார்கள் என்று எண்ணி தானே புஜித்தாள். அதனால் அவள் வயிற்றில் குட்டை போன்ற ஒரு கட்டி ஏற்பட்டது. அது பயனற்றதாகவும் ஆயிற்று.

அதிதியானவள் முதலில் ஸாத்யர்களுக்கு ப்ரஹ்மௌதனத்தை அளித்தாள். இரண்டாவது தடவை தானே புஜித்தாள். மூன்றாவது முறையாக ஆதித்யர்களின் பொருட்டு ப்ரஹ்ம ஓதனத்தை அளித்தாள். இந்த தடவை மீதியை தான் உண்டு அதிதி மறுபடியும் கர்ப்பம் தரித்தாள். இந்த கர்ப்பம் நன்கு வளரும் வரை பொறுத்து இருப்போம். பிறக்கும் பிள்ளையானவன் தனக்கு நன்மைகளை அளிப்பான் என்று எண்ணினாள்.

பிறக்கும் பிள்ளை பணக்காரனாக இருக்க வேண்டும் என்றும் எண்ணினாள். அவள் எண்ணியபடி விவஸ்வான் என்ற பிள்ளை பிறந்தான்.

இன்று உள்ள மனிதர்கள் யாவரும் அவன் ப்ரஜைகள். அந்த ப்ரஜைகளிலும் யார் யாகம் செய்கிறானோ அவன் செல்வத்தை அடைகிறான். இவ்விதம் ஸூர்யனுடைய பிறப்பு கூறப்பட்டுள்ளது. புராணங்களிலும் இவ்வரலாறு நேர் முறையாகக் கூறப்பட்டுள்ளது. கஶ்யபருக்கு கத்ரு, விநதை என்று இரு மனைவியர். அதில் கத்ருவிற்கு அநேகம் பிள்ளைகள் பிறந்தனர். பாம்புகள்தான் கத்ருவின் பிள்ளைகள். ஆதலால் பாம்புகள் காத்ரவேயர்கள் எனப்பெயர் பெறுகின்றன.

கத்ருவைக் கண்டு பொறாமை அடைந்த விநதையானவள், ஒரு முட்டையைப் பெற்றாள். அதை நெய் குடத்தில் வைத்து வளர்த்தாள். அதிலிருந்து தனக்கு பிள்ளை பிறப்பான் என்று எண்ணி இவ்விதம் செய்தாள். ஆயிரம் வருஷங்கள் ஆகியும் நெய் குடத்திலிருந்து ஒன்றும் தோன்றவில்லை. அவசரப்பட்டவளாக அவள் அந்தக் குடத்தைக் கவிழ்த்தாள். அதிலிருந்து கைகால்கள் அற்ற ஒரு பிள்ளை பிறந்தான். அவன்தான் அருணன். அவன் ஸூர்யனுக்கு தேரோட்டியாக இருக்கிறான். ஸூர்ய நமஸ்காரம் செய்பவர்களால், அவன் முதலில் *அருணாய நம:* என்று சொல்லி வணங்கப்படுகிறான்.

விநதையானவள் மறுபடியும் ஒரு முட்டையை பெற்றாள். முன்பு போல் அவசரப்படாமல் அதை பொறுமையுடன் நெய் குடத்தில் வளர்த்தாள். அதிலிருந்து லட்சம் வருடம் கழித்து கருடன் தோன்றினான். ஆதலால் கருடனுக்கு வைநதேயன் எனப்பெயர். இவ்விதம் புராணங்களில் உள்ள ஒவ்வொரு கதைகளும் வேதத்தைப் பின்பற்றியே ஏற்பட்டு இருக்கின்றன. ■

---

முன் அட்டைப்படம் : ஸ்ரீ ஸ்வாமிகள்

பின் அட்டைப்படம் : பண்டரீபுரத்தில் வீதி பஜனை செய்யும் நம் ஸ்வாமிகள்

# சொல்லின் செல்வன் - 1

- பாலாஜி

'சொல்லின் செல்வன்' என்றால் *''யத்ரயத்ர ரகுநாத கீர்த்தனம்''* என்றபடி ராமனுடைய குணங்களைச் சொல்லும் இடம் எல்லாம் *''தத்ரதத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம்''* என்றபடி ஹனுமான் இருப்பது ப்ரஸித்தம். எனவே, சொல்லின் – ராமனுடைய குணங்களைச் சொல்லின், செல்வன் - அங்கு செல்வார் என்பதாகும். அப்படி பெருமை வாய்ந்த ஸ்ரீ ஆஞ்ஜநேயர் ஸுந்தரகாண்டத்தில் தன்னுடைய புத்தி சாதுர்யத்தாலும், சொல்வன்மையினாலும், அவிச்சின்னமான முயற்சியினாலும் ஸீதையைக் கண்டுபிடித்து ராமனிடம் சேதி சொல்கிறார். ஸுந்தரகாண்டம் என்ற பெயரினாலேயே மற்ற காண்டங்களைக் காட்டிலும் இதன் சிறப்பு வெளிப்படுகிறது.

ஸ்ரீராமனுடைய ஸஹதர்மசரீயான ஸீதாதேவியைத் தேடும் பொருட்டு ஸ்ரீ ஸுக்ரீவ மஹாராஜாவினுடைய ஸேனைகள் பல திக்கிற்கும் அனுப்பப்பட்டன. ஹனுமான், அங்கதன், ஜாம்பவான் முதலியோர் அடங்கிய ஒரு குழு தென்திசையை நோக்கி கிளம்பியது. அந்தக் கூட்டத்தில் ஹனுமானுடைய வாக்சாதுர்யம், தைர்யம், புத்திசாதுர்யம் எடுத்த கார்யத்தில் காட்டும் ஈடுபாடு, எடுத்த காரியத்தை பூர்ணமாக முடிக்கும் திறமை ஆகியவற்றைக் கண்ட ஸ்ரீராமபிரான், பிராட்டியை இவன் கண்டுபிடிக்கக்கூடும் என்ற எண்ணத்தினாலேயே ராமநாமம் பதித்த தன்னுடைய மோதிரத்தை தூதிற்கு அடையாளமாக ஹனுமானிடம் தந்தார்.

இப்படி ராமபிரானுடைய அனுக்ரஹத்துடன் கிளம்பிய ஹனுமான் தன் ஸகாக்களுடன் வங்கக்கடலை அடைந்தார். அங்கு அந்த வானரக் கூட்டம், ஸம்பாதி என்ற கழுகின் மூலம் ஸீதை இருக்குமிடத்தை அறிந்தது. ஸீதை இருக்குமிடமான லங்கையை அடைவதற்கு ஹனுமானே தகுதியானவன் என்று ஜாம்பவான் ஹனுமானைப் புகழ்ந்தார். ஜாம்பவானளித்த உத்ஸாஹத்தாலும், ஸீதையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற உறுதியினாலும், ஹனுமான் ஸமுத்திரத்தைத் தாண்டி இலங்கையில் ஸீதையைத் தேடக் கிளம்பினார்.

ஒரு கார்யத்தை எடுத்துக்கொண்டால் அதை முடிப்பதற்குள் பல இடையூறுகள் வரும். அவற்றைச் ஸமாளித்தால்தான் அந்த கார்யத்தை ஸாதிக்கமுடியும். சில இடங்களில் புத்தி பூர்வமாக யோசித்து ஸமயோசிதமாக செய்யவேண்டும். சில இடங்களில் பலத்தையும் வீரத்தையும் காட்டவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக எடுத்த கார்யத்தை அழகாக தெளிவாக செய்து முடிக்கவேண்டும். அதுபோல், முழு ஈடுபாட்டுடன், வேறு விஷயங்களில் கவனம் போகாமல் செய்யவேண்டும். சொல்லின் செல்வனாகிய ஹனுமானுடைய கார்யங்களில் இவையனைத்தும் காணப்படுகின்றன.

முதலில் அவர் லங்கைக்குப் போவதற்காக கடலைத் தாண்டும் பொழுது மைனாகபர்வதம் அவர் முன் தோன்றி தன்னிடம் இளைப்பாறி செல்லுமாறு வேண்டியது. ஆனால், ஹனுமான் எடுத்த கார்யம் முடியும்வரை எங்கும் தங்கமுடியாது என்று மறுத்துவிட்டார். அதுபோல் ஸுரஸை என்பவள், நாகர்களின் தாய், தக்ஷனின் புதல்வி, அவள் ஹனுமானிடம், ப்ரஹ்மா எனக்களித்த வரத்தின்படி நீ என் வாயில் நுழைந்து போகவேண்டும் என்று கூற, ஹனுமான் வேறுவழியின்றி அவளுடைய வாயில் நுழைவதற்கு எண்ணங்கொண்டு தன் உருவத்தைப் பெரிதாக்கினார். ஸுரஸையும் தன் வாயைப் பெரிதாக்கினாள். அதற்கேற்றாற்போல் ஹனுமானும் தன் உருவத்தைப் மேலும் பெரிதாக்க ஸுரஸையும் தன் வாயைப் பெரிதாக்கினாள்.

இந்த ஸமயத்தில் ஹனுமான் ஸமயோசிதமாக தன்னுடைய ஶரீரத்தை உடனே சிறியதாக்கி அவளுடைய வாயில் நுழைந்து க்ஷணநேரத்தில் வெளியே வந்தார். அதனால் மகிழ்ந்த ஸுரஸையும் ஆஞ்ஜநேயருக்கு வாழ்த்து கூறி வழிவிட்டாள்.

இதேபோல் ஸிம்ஹிகை என்ற ராக்ஷஸியின் வாயில் நுழைந்து அவளுடைய உயிர்நாடிகளை தன் நகத்தால் கிழித்து அவள் வாயை மூடும் முன் வெளிவந்தார். அந்த ராக்ஷஸியும் இறந்தாள். இப்படி தன் கார்யம் முடியும் வரை இளைப்பாறுதல் போன்ற சுகங்களைத் துறந்து, ஸுரஸையினால் ஏற்பட்ட இடையூற்றை தன்னுடைய புத்திசாதுர்யத்தினால் கடந்து, ஸிம்ஹிகை என்ற ராக்ஷஸியை தன்னுடைய பராக்ரமத்தினால் வதஞ்செய்து லங்கையின் கரையை வந்தடைந்தார்.

இப்படி ஹனுமான் ஸீதையைக் கண்டுபிடித்து ஸ்ரீராமனிடம், *"த்ருஷ்டா மயா ஸீதா"* என்று கூறும்வரை பல ஸாஹஸங்களைப்

புரிந்திருக்கிறார். அவற்றில் அவருடைய பக்தி, மனஉறுதி, வாக்சாதுர்யம், தைர்யம் போன்றவை மிகவும் பிரகாசிக்கின்றன.

பலவித இடையூறுகளையும் மீறி தன்னுடைய புத்தி சாதுர்யத்தினால் இலங்கையை அடைந்த ஹனுமான் இரவில் லங்காபுரியில் ப்ரவேசிப்பது என்று தீர்மானித்தார். லங்காபுரியே ஸ்வயம் 'லங்கா' என்ற ராக்ஷஸீ ரூபத்தில் லங்கையை பாதுகாத்து வந்தாள்.

அவள் ஸ்ரீ ஹனுமானின் முன்நின்று தன் அனுமதியில்லாமல் யாரும் உள்ளே போக முடியாது என்று கூறி, நீ யார்? என்று ஹனுமானைக் கேட்டாள். அதற்கு ஹனுமான் சாதுர்யமாக, தான் ஒரு ஸாதாரணக் குரங்கு என்றும், லங்காவின் அழகை ரசித்துவிட்டு திரும்பிவிடுவேன் என்றும் கூறினார். ஆனால் அவரைத் தடுத்த அந்த ராக்ஷஸீ ஹனுமானை ஓங்கி அடித்தாள். அதனால் கோபம் கொண்ட ஹனுமான் அவள் ஸ்த்ரீ என்றதால் வலக்கையால் அடிக்காமல் இடக்கை முஷ்டியால் ஒரு குத்துவிட்டார்.

அதனால் கதிகலங்கிப்போன அந்த ராக்ஷஸீ, கர்வம் அகன்றவளாய் ஹனுமானைப் பார்த்து, "வானரவீர! என்னை நீர் உமது பராக்ரமத்தால் வென்றீர்! தைர்யம் முதலிய நற்குணங்கள் நிறைந்த வீரர்கள் ஸ்த்ரீகளைக் கொல்லமாட்டார்கள். எனக்கு அருள்புரிய வேண்டும். நான் சொல்லும் ஒரு உண்மையைக்கேளும். ப்ரஹ்மதேவன் எனக்கு ஒரு வரம் அளித்தார். "உன்னை எப்பொழுது ஒரு வானரம் வந்து வெல்லுகிறதோ அப்பொழுது முதல் அரக்கர்களுக்கு ஆபத்துக்காலம் என அறிந்துகொள்" என்பது அவருடைய வாக்கு. நீர் என்னை இப்பொழுது ஜயித்ததனால் அந்தகாலம் வந்துவிட்டது என்று அறிகிறேன். ஸீதையின் காரணமாக ராக்ஷஸர்களின் குலம் நாசத்தை அடையப்போகிறது. நீர் சாபமிடப்பெற்ற இந்த நகருக்குள் தங்கள் இஷ்டம் போல் நுழைந்து, ஜனககுமாரியான ஸீதாதேவியைத் தேடிக் காண்பீராக" என்றாள்.

இதன் மூலம் ஒரு விஷயம் தெளிவாகிறது. என்னவென்றால் நடப்பவையாவும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுள்ளன என்பதே. இதனால் இரண்டு நன்மைகள். ஒன்று, நாம்தான் இந்தக் கார்யத்தை ஸாதித்தோம் என்ற கர்வம் ஏற்பட வாய்ப்பில்லை. தானும் இந்த நாடகத்தின் ஒரு பாத்ரம் என்று புரிந்து கொள்ளமுடியும். இரண்டாவது எப்படியும் கார்யம் ஸாதகமாக முடியும் என்று தெரிந்ததால் மேலும் உத்ஸாஹத்துடன் கார்யத்தில் ஈடுபடலாம்.

இப்படி லங்காதேவியை ஜயித்த ஹனுமான் லங்கா நகரத்துள் நுழைந்தார். நகருக்குள் செல்லும்பொழுது ஹனுமான் ஸாதாரணமாகச் செல்லாமல் லங்கா நகரின் அமைப்பு, வீரர்கள் காவல் செய்யும் இடங்கள், அவர்கள் காவல் காக்கும் முறை, காவல் காக்கும் வீரர்களின் எண்ணிக்கை, இயற்கையில் அந்த நகருக்கு அமைந்திருந்த பாதுகாப்புகள் முதலியவற்றைக் கவனித்து இந்த நகரத்தை எதிரிகளால் ஸாமான்யமாக கைப்பற்றிவிடமுடியாது என்று எண்ணினார். இப்படி அந்த நகரைப் பார்த்துக் கொண்டே ராவணனுடைய மாளிகையைக் கண்டார்.

முதலில் ராவணனுடைய அந்தப்புரத்தில் ஸீதையைத் தேடினார். பிறகு மற்ற ராக்ஷஸர்களுடைய க்ருஹங்களில் தேடினார். புஷ்பகவிமானம் உள்ள இடம், மற்ற இடங்களையும் தேடி ஸீதையைக் காணாமல் துக்கித்தார். ஒரு ஸமயம், ராவணனுடைய அந்தப்புரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் மந்தோதரியைக் கண்டு அவளுடைய அழகினால் அவள்தான் ஸீதையாக இருக்கக்கூடும் என்று ஸந்தோஷித்தார்.

ஹனுமான் ஸீதையைத் தேடி வந்ததால், அதே நினைவில் எல்லாரையும் பார்த்ததால் மந்தோதரியைப் பார்த்தவுடன் ஸீதை என்று நினைத்துவிட்டார். இது தவறில்லை. ஏனெனில், ஸீதையையே நினைத்துக் கொண்டிருந்ததால் ஸீதை என்ற ஒரு அபிப்ராயம் தான் மந்தோதரியின் மேல் ஏற்பட்டது. ஹனுமான் உடனே, அடடா! இது இது ஸீதையாக இருக்க முடியாது. ஏனெனில், ராகவனைப் பிரிந்த ஸீதையால் தூங்கமுடியாது. உண்ணமுடியாது, அதனால், எந்த ராமனுக்கு தேவர்களும் ஸமமாக முடியாதோ, அந்த ராமனுடைய பத்தினியான ஸீதையாக இவள் இருக்கமுடியாது என்று தீர்மானித்து மறுபடியும் தேடினார்.

ஹனுமான் ராவணனுடைய அந்தப்புரத்திலேயே ஸீதை இருக்கிறாளா என்று தேடினார். அங்கு ராவணனால் கவர்ந்து வரப்பட்ட எல்லாப் பெண்களையும் காண்கிறார். இங்கு ஹனுமான் ஸீதையை ராவணனுடைய மாதர் கூட்டத்தில் தேடியபொழுது இப்படி அலங்கோலமாக உறங்கும் ஸ்த்ரீகளைப் பார்ப்பது ஶாஸ்த்ர விரோதமல்லவா! இப்படி இங்கு வந்து நாம் தேடினோமே என்ற எண்ணி வருந்தினார்.

உடனே, இதுபோல் குறுக்கு வழியில் தோன்றும் கவலை, கார்யத்திற்கு இடையூறு என்று எண்ணி நேர்வழியில் ஆலோசித்தார். தனது இயற்கையான மதிநுட்பத்தையும் உறுதியையும் முன்நிறுத்திச் சிந்தித்தார்.

ஒரு சில நிமிஷம் ஏகாந்தமான ஆலோசனைக்குப் பிறகு கார்ய முடிவுக்காண யோஜனை பிறந்தது. "இவர்களைக் கண்ட என் மனம் சிறிதும் கலங்கவில்லை. கண், காது முதலிய இந்த்ரியங்கள் மனதினாலன்றோ இயக்கப்படுகின்றது. அந்த மனம் எனது ஸ்வாதீனத்தில் உறுதியுடன் இருக்கிறது. நான் தேடி வருவது ஒரு ஸ்த்ரீயை. அவளை ஸ்த்ரீகள் கூட்டத்திலல்லாது வேறு எங்கு தேடமுடியும் என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்டார்.

இங்கும் ஹனுமானின் உறுதி வெளிப்படுகிறது. அஸத்தாக, பிறர் பொருளின் மீது ஆசையும் வெறுப்புங்கொண்டு இந்த்ரியங்களைச் செலுத்துதல் தான் பாபம். ஆனால் ஹனுமான் அவ்வித எண்ணங்கொண்டு காணவில்லை. ஞானத்தினால் நிறைந்த அவர் பிற மாதரை ஒரு பொருட்டாகவே நினைப்பதில்லை என்று தெளிவாகிறது.

ஆனால், எங்கு தேடியும் ஸீதை கிடைக்காததால், மனம் வருந்திய ஹனுமான், ஒருக்கால் ராவணன் ஸீதையைக் கொன்றிருப்பானோ? அல்லது ஸீதைமேல் பொறாமை கொண்டு ராக்ஷஸிகள் அவளைத் தின்றிருப்பார்களோ? ஒருக்கால் ராவணனால் பீடிக்கப்பட்டவர்களான ஸீதை, வரும் வழியில் ஸமுத்திரத்தில் விழுந்திருப்பாளோ? அல்லது தன் உயிரைத்தான் விட்டிருப்பாளோ? என்று பலவாறு சிந்தித்து வருந்தினார்.

"ஸீதை கிடைக்காமல் ஸ்ரீராமனிடம் சென்று நான் என்ன கூறமுடியும். ஸீதை கிடைக்கவில்லை என்ற சொல்லைக் கேட்டு ராமன் உயிர் பிரிவான். ராமன் உயிர் நீத்தால், அருமைத் தம்பியான லக்ஷ்மணனும் உயிர் துறப்பான். ராமன் வராததால், பரதனும், ஸத்ருக்னனும் மடிவார்கள். அவர்களைப் பிரிந்த கௌசல்யா, கைகேயி, ஸுமித்திரை ஆகியோரும் மடிவர். தங்களுடைய தலைவனான ராமனின் பிரிவால் வாடும் அயோத்தி மக்கள் உயிர் துறப்பர். ஸுக்ரீவன் மடிவான். அவனைத்தொடர்ந்து வானர ஸமூஹமே அழியும் என்று விளைவுகளைப் பலவாறு சிந்தித்து மனம் வருந்தினார். உடனே தன்னுடைய வருத்தத்தை உதறி, ஸஞ்சலமில்லாத மனதினால்தான் கார்யத்தை ஸாதிக்கமுடியும் என்று தீர்மானித்து மறுபடியும் ஸீதையைத் தேடினார்.

அப்பொழுது, இதுவரை தேடப்படாமலிருந்த அஶோகவனம் அவர் கண்களில் பட்டது. உடனே ஸீதாராமனுக்கு நமஸ்காரம் செய்து உத்ஸாஹமாக அஶோகவனத்தில் நுழைந்தார். அந்த அஶோகவனத்தின் ஶோபையைக் கண்டு ஆஶ்சர்யம் அடைந்தார். பலவித புஷ்பங்கள் நிறைந்த மரங்கள், புஷ்பங்கள் கீழே விழுந்துள்ளதால் புஷ்பங்களால் மறைக்கப்பட்ட பூப்ரதேசங்கள், புஷ்பமயமான பர்வதம், அத்தகைய புஷ்பங்களின் நல்வாசனை போன்றவை அந்த வனத்தை மிகவும் அழகு படுத்தின.

அந்த வனத்தில் பல இடங்களில் சுற்றியபின், ஒரு ஸிம்ஶுபா வ்ருக்ஷத்தின் அடியில் ராக்ஷஸிகளால் சூழப்பட்ட ஒரு ஸ்த்ரீயைக் கண்டார். அவள் அழுக்கடைந்த ஆடையை அணிந்திருந்தாள். உபவாஸத்தினால் இளைத்தவளாய் காணப்பட்டாள். அடிக்கடி எதனையோ நினைத்து பெருமூச்சு விடுபவளாய் காணப்பட்டாள். ஶோகம் தோய்ந்த உருவத்தையும், மனோஹரமான ஒளியையும் கண்டு, எந்த ஸீதையை ஸ்ரீராமன் அல்லும் பகலும் நினைந்து கண்ணீர் விடுகிறாரோ, எந்த ஸீதையின் பெயரை அடிக்கடி 'ஹா ஸீதே!' என்று உச்சரிக்கிறாரோ, அந்த ஸீதை இவளாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

மேலும், ராவணன் போன்ற ஒரு கொடிய ராக்ஷஸனால் பீடிக்கப்பட்டும் இவள் தனது பாதிவ்ரத்யத்தை என்ன அழகாய் காப்பாற்றி வருகிறாள்! நான் இந்தக் கடலைக் கடந்து வந்தது கூட பெரிய காரியமன்று! ஆனால், இந்த தேவியை விட்டுப்பிரிந்த எனது ப்ரபு சோகத்தினால் மாளாது இன்னம் உயிர் தரித்துக்கொண்டு விளங்குவதுதான் ஒருவராலும் செய்யப்படாத ஒரு வினோதச் செயல்'' என்று பலவாறு மனதிற்குள் ஸீதையைக் கொண்டாடினார்.

அந்த நேரத்தில் ராவணன் ஸீதையைக் காண வந்தான். தன்னுடைய ஆசைக்கு அடிபணியுமாறு ஸீதையைப் பலவிதமாக யாசித்தான். ஆனால், ஸீதை ராவணனை இகழ்ந்து, ராகவனுடைய குணங்களைப் புகழ்ந்து, ராகவனுடைய பெருமைகளைப் பலவாறு கூறி, ''நீ உயிர் தரிக்க விரும்பினால், என்னை என் பிரபுவிடம் சேர்த்து அவரிடம் நட்பு செய்துகொள்'' என்று உபதேசித்தாள். ஸீதை மூலமாக ராமனுடைய குணங்களைக் கேட்ட ராவணன், எங்கே தானும் ராமனிடம் ஶரணாகதி செய்துவிடுவோமோ என்று பயந்து, இன்னும் இரண்டு மாதத்தில் நீ எனக்கு ஸம்மதம் தரவில்லையென்றால் எனக்கு இரையாவாய் என்று காலக்கெடு விதித்து மிரட்டிவிட்டுச் சென்றான்.

ராவணன் சென்ற பின்பு அவனுடைய ராக்ஷஸிகளால் மிகவும் துன்புறுத்தப்பட்ட ஸீதை, தான் உயிரைவிடத் துணிந்து, ஹனுமான் இருக்கும் வ்ருக்ஷத்தின் அடியில் வந்தாள். இந்த ஸமயத்தில் ஸீதையுடன் பேச நினைத்த ஹனுமான், தான் உடனே இதே ரூபத்தில் சென்றால் தன்னை ஸீதை, ராவணன் என்று ஸந்தேகிக்கக்கூடும் என்று எண்ணி ஸமயோசிதமாக ராமனுடைய கதையைக் கூற ஆரம்பித்தார். அதுவும் என்ன மொழியில் இருந்தால் ஸீதைக்குப் புரியும் என்ற யோசித்து, கடைசியில் ஸம்ஸ்க்ருதத்திலேயே சொல்ல ஆரம்பித்தார்.

திடீரென்று ராமபிரானுடைய கதை காதில் விழுந்தவுடன் ஆச்சரியத்துடன் ஸீதாதேவி சுற்றிலும் பார்த்தார். அப்பொழுது சுபசகுணங்களும் பல தோன்றின. ஸ்ரீ ஹனுமானும் ராமனுடைய சரித்திரத்தைக் கூறி ஸீதை முன்பு தோன்றினார். இந்த அதிசயத்தைக் கண்ட ஸீதை ஒரு கால் கனவு காண்கிறோமோ? கனவில் குரங்குகள் வருவது நல்லதில்லையே என்று எண்ணினாள். ஆனால், இது கனவு அல்ல நிஜம்தான். இவன் யாராக இருக்கக்கூடும் என்று பயத்துடன் ஹனுமானைப் பார்த்தாள். ஸீதையின் எண்ணத்தை புரிந்து கொண்ட ஹனுமானும், ராமபிரானுடைய பெருமைகளைக் கூறி தன்னை யார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். ஸ்ரீராமனுடைய சரிதத்தைக் கேட்டதால் ஆனந்தம் கொண்ட ஸீதை, உடனே இவன் ராவணனாக இருப்பானோ என்று ஸந்தேகித்தாள். அவளுடைய ஸந்தேகத்தை புரிந்துகொண்ட ஹனுமான், தான் ராமனுடைய தூதன்தான் என்று கூறினார். ஸீதை, "நீ ராமனுடைய தூதன் என்றால், அவருடைய லக்ஷணங்களையும், குணங்களையும் அதுபோல் தம்பி லக்ஷ்மணனுடைய லக்ஷணங்களையும் கூறுவாய்" என்று சொன்னாள்.

(தொடரும்)

**If there is faith there is no fate**

**- Sri Swamigal**

# எந்தரோ மஹானுபாவுலு - 4

ஆசார்யனுக்கு தனது மனைவி செய்த அபசாரத்தால் மனது வெதும்பின ஸ்ரீ ராமானுஜர், தான் வாங்கி வந்திருந்த பழங்கள், வெற்றிலை, மாலை ஆகியவற்றுடன் பேரருளாளன் கோவிலை நோக்கி நடக்கலானார். அவர் சென்ற சிறிது நேரத்தில், மெலிந்த தோற்றமுடைய ஒரு வைஷ்ணவர் ராமானுஜர் வீட்டுக்கு வந்து பிக்ஷை கேட்க, தஞ்சமாம்பாள் அவரை சுடு சொற்களால் விரட்டிவிட்டாள். தன் விதியை நொந்துகொண்டு அந்த ப்ராஹ்மணர், கோவிலை நோக்கி நடக்கும்பொழுது, எதிரே கோவிலிலிருந்து திரும்பி வந்த ராமானுஜரைக் கண்டார். ராமானுஜர் அவரிடம், ப்ராஹ்மணரே! நீர் உணவு உட்கொள்ளவில்லை போல் தோன்றுகிறதே. வாட்டமுற்று இருக்கிறீரே! என வினவினார். உடனே அந்த ப்ராஹ்மணர் "உமது திருமாளிகைக்குச் சென்று உணவு கேட்டேன். உமது மனைவி 'இல்லை' என்று சொல்லி விரட்டிவிட்டாள் என்று சொன்னார்.

ராமானுஜர் அவரை நோக்கி, "ஸ்வாமி, தாங்கள் பசியுடன் திரும்பிப் போகக்கூடாது. நான் ஒரு கடிதமும், வெற்றிலை பாக்கு, பழம், புதிய ஆடை முதலியவற்றை கொடுக்கிறேன். அதை எடுத்துக்கொண்டு போய் என் மனைவியிடம் கொடுத்து, அவள் தகப்பனார் அனுப்பி இருப்பதாக சொல்லுங்கள். பிறகு உங்களை கவனித்து விருந்து வைப்பாள்" என்றார்.

அதன்படி அந்த ஸ்ரீவைஷ்ணவரும் ராமானுஜரது இல்லத்துக்குச் சென்று கதவைத் தட்டினார். ராமானுஜரது மனைவியிடம், "தங்களது தகப்பனார் ஊருக்குப் போயிருந்தேன். அங்கிருந்து சேதியும் கொண்டுவந்தேன்" எனக்கூறி உள்ளே சென்று புடவை, வேஷ்டி, வெற்றிலை, பாக்கு, பழம் ஆகியவற்றை அலங்காரமாக வைத்துவிட்டு, ராமானுஜர் அவரிடம் தஞ்சமாம்பாளின் தகப்பனார் எழுதியதுபோல் எழுதிக் கொடுத்த கடிதத்தையும் கொடுத்தார். அந்தக் கடிதத்தில் தஞ்சமாம்பாளின் சகோதரிக்கு திருமணம் என்றும், திருமண ஏற்பாடுகளை கவனிக்க வேண்டியிருப்பதால் தன்னால் நேரில் வர இயலவில்லை என்றும், உடனடியாக இருவரும் வரவேணுமென்றும் எழுதியிருந்ததைக் கண்டு ராமானுஜரது மனைவி மிகமகிழ்ச்சியுடன் அந்த ப்ராஹ்மணரை ஆரவாரத்துடன் வரவேற்று, அமுது செய்துவிட்டு செல்லுமாறு உபசரித்தாள்.

சில நிமிடங்களில் வெகு விமரிசையாக தளிகை தயார் செய்து அந்த ஸ்ரீவைஷ்ணவருக்கு உணவையும் பரிமாறினாள். அவர் சாப்பிடுகையில் தனது பிறந்தகத்து விஷயங்கள் பலவற்றையும் விசாரித்தாள். உணவு உண்டபின், அந்த ப்ராஹ்மணர், கோவிலுக்கு வந்து ராமானுஜரிடம் நடந்த விவரங்களைச் சொன்னார். ராமானுஜர் தமக்கு உதவியதற்காக அந்த ஸ்ரீவைஷ்ணவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு ஏதுமறியாதவர் போல் தனது இல்லம் வந்தார். தஞ்சமாம்பாள் அவரை உத்ஸாஹத்துடன் எதிர்கொண்டு பலவிதமாக உபசரித்தாள். பிறகு அவருக்கு அமுது படைக்கும்போது மெதுவாக தனது பிறந்தகத்து திருமணத்தைப் பற்றி ப்ரஸ்தாபித்தாள். உடனே ராமானுஜர் அவளிடம், "எனக்கு அவசர அலுவல்கள் இருப்பதால் நான் உன்னுடன் வரமுடியாது. ஆகவே நீ இன்றே புறப்பட்டு பிறந்தகத்துக்குச் சென்றுவிடு. மாமனார், மாமியாருக்கு என் வணக்கத்தையும் தெரிவி" என்று சொல்லி, அவளை வண்டி கட்டி பிறந்தகத்துக்கு அனுப்பி வைத்தார்.

பிறகு ராமானுஜர் நேராகக் கோவிலுக்கு சென்று பேரருளாளன் முன்பு நின்று, "அடியேனுக்கு ஸந்யாஸ ஆஶ்ரமம் ஸித்திக்கவேண்டும்" என்று வேண்டி நின்றார். பேரருளாளனும் திருக்கச்சிநம்பி மூலமாக ராமானுஜரை, "யதிராஜரே" என்றழைக்க, தனக்கு ஸித்தித்த ஸந்யாஸ ஆஶ்ரம தர்மப்படி ஸ்ரீராமானுஜரும், த்ரிதண்ட காஷாயாதிகளைத் தரித்து உதயசூரியன் போல் ஒளிவீசித் திகழ்ந்தார். ஸ்ரீவைஷ்ணவ தர்சன நிர்வாகத்திற்காக அவதரித்த ஸ்ரீ ராமானுஜர் ஸந்யாஸியான அந்தக் கணத்திலேயே குடும்ப அபிமானத்தை அறவே துறந்து ஆஶ்ரம அபிவிருத்தியிலும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை திடப்படுத்தவும். விஸ்தரிக்கவும் அவசியமான பணிகளில் தமது சிந்தை முழுவதையும் செலுத்தலானார். ஸ்ரீராமானுஜர் வரலாற்றில் மீண்டும் எந்த இடத்திலும் தஞ்சமாம்பாள் இடம் பெறவே இல்லை. இதுவே அவரது அப்பழுக்கற்ற துறவறத்துக்குச் சான்று.

ராமானுஜரது துறவறம் அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. அவருடைய மனைவியும் அவரும் இளம்வயதினரே. சிலர் அவரை பைத்தியம் என்றனர். சிலர் அவரை பகவானுடைய அவதாரம் என்று புகழ்ந்தனர். மக்கள் அவரைக் காண எல்லாத்திசைகளிலிருந்தும் திரண்டு வந்தனர். அவரது மருமகனான தாசரதி என்னும் முதலியாண்டான் அவரிடம் முதன் முதலாக தீக்ஷை பெற்றுக்கொண்டார். பிற்காலத்தில் இவர்

ராமானுஜரது 'த்ரிதண்டம்' எனப் பெயர் பெற்று ராமானுஜரை விட்டுப் பிரியாமல் வாழ்ந்தார்.

அடுத்து காஞ்சீபுரத்துக்கு அருகில் உள்ள கூரம் என்ற கிராமத்தைச் சேர்ந்த கூரேசன், ஸ்ரீராமானுஜர் மடத்தில் கைங்கரியம் செய்யவேண்டுமென்ற ஆசையால் தனங்களையும், நிலங்களையும் விட்டு காஞ்சீபுரத்துக்குப் பயணமானார். அவர் மனைவி ஆண்டாள், மிகவும் நுண்ணறிவும் வேத ஶாஸ்த்ர விஷயங்களைப் பற்றிய அறிவும் கொண்டவள். அவளும் கூரேசனும் காஞ்சியை நோக்கி பயணமானாள். வழியில் அவள், 'பயமாக இருக்கிறது' என்று தன் கணவனிடம் சொல்ல அவர், ''மடியில் கனமிருந்தால் தானே வழியில் பயமிருக்கும். நீ ஏதாவது விலையுயர்ந்த பொருளைக் கொண்டு வந்துள்ளாயா?'' எனக் கேட்டார். அதற்கு அவள் ஒரு பொன் வட்டிலை மட்டும் கூரேசன் சாப்பிடுவதற்காக கொண்டுவந்திருப்பதாகச் சொன்னாள். உடனே கூரேசன் அதை அவளிடமிருந்து வாங்கி வெகு தூரத்திற்கு சுழற்றி எறிந்துவிட்டு, 'இனி பயமில்லை வா' என்று அழைத்துக்கொண்டு காஞ்சிமாநகர் வந்து சேர்ந்தார். ராமானுஜரை தரிசித்து மடத்தில் சேர்த்துக் கொள்ள விண்ணப்பித்துக்கொண்டனர்.

ராமானுஜரும் கூரேசனை பஞ்ச ஸமஸ்காரங்கள் செய்வித்து தனது சீடராக ஏற்றுக்கொண்டார். பிற்காலத்தில் கூரேசன், கூரத்தாழ்வார் என மிகவும் புகழ்பெற்று விளங்கினார். ராமானுஜரது சீடர் குழாம் மிகவும் பெருகிவிட்ட காலத்திலும், மிகமிகச் சிறந்த வித்வானாக கூரத்தாழ்வார் மதிக்கப்பெற்றார். புலமையைப் போல், புனிதத் தன்மையும் சேரப்பெற்ற இவரை ராமானுஜர் தமக்கு பவித்ரம் போன்றவர் என பாராட்டியதில் வியப்பில்லை.

பேரருளாளன் ஆஜ்ஞைப்படி திருக்கச்சிநம்பி காட்டிய மடத்தில் எழுந்தருளிய ராமானுஜர், ஸ்ரீஆளவந்தார் தன் மீது காட்டிய க்ருபை பற்றி நினைந்துருகி, அவர் தனது பந்தங்களை ஒவ்வொன்றாக அறுத்து தம்மை ஆட்கொண்ட விந்தையை எண்ணினார். அதிகமாகக் காலம் கடத்தாமல் அவரது கடைசி கோரிக்கைகளைச் செயலாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தார். அந்த மகத்தான பணிக்கு வேண்டிய உதவியைப் பற்றி எண்ணமிட்டார். உடனே அவருடைய எண்ணங்கள் அவரது ஒன்றுவிட்ட ஸஹோதரனும், யாதவப்ரகாசரிடம் பயிலும்பொழுது தனது பள்ளித் தோழனுமாயிருந்த கோவிந்தனை நோக்கி திரும்பின. ''கோவிந்தன் சிறந்த

வைராக்கியமும் ஶாஸ்த்ரங்களில் தேர்ந்த பயிற்சியும் உடையவன். எனக்கு மிகவும் அனுகூலன். ஸ்ரீ வைஷ்ணவத்தைப் பரப்பும் பெரும் ஸேவையில் எனக்குத் துணை நிற்க வல்லவன், நல்லவன், விரக்தன்'' என்று எண்ணி ''இப்பேர்ப்பட்டவன் வைணவ மார்க்கத்திலிருந்து நழுவிவிட்டானே! அவனை திருத்தி யார் அழைத்து வர முடியும்'' என சிந்தித்தார். உடனே அவருக்கு காளஹஸ்திக்கு அருகிலேயே, திருமலையில் வேங்கடேமுடையானை ஸதா வழிபட்டு வரும் பெரிய வைணவ ஆசாரியரான பெரியதிருமலைநம்பியின் நினைவு வந்தது. அவருக்கு எப்படியாவது கோவிந்தனை வைணவத்துக்கு திருப்பிக் கொண்டுவந்தால் நலம் என்று கடிதம் எழுதி அனுப்பினார். கடிதம் கிடைத்ததும் பெரிய திருமலைநம்பி தம் சீடர்களுடன் சென்று காளஹஸ்திக்கு அருகில் ஒரு பெரிய குளத்தின் கரையில் தங்கினார்.

கோவிந்தர் அந்தக் குளத்துக்கு தினம் நீராட வரும் வழக்கம். நீராடி மலர்களை எடுத்துக் கொண்டு செல்வார். ஒருநாள், வழக்கம் போல் குளத்துக்கு செல்கையில், அங்கே தெய்வீக எழில் பொருந்திய வைணவப் பெரியவரான திருமலைநம்பி தம் சீடர்களுடன் ஶாஸ்த்ர விஷயங்கள் பற்றி உரையாடுவதைக் கண்டார். அவர் என்ன பேசுகிறார் என்று கேட்க ஆவல் கொண்ட கோவிந்தர் மலர்களைப் பறிக்க அருகிலிருந்த பாதிரி மரத்தில் ஏறினார். அந்த பெரியவரின் பேச்சு கோவிந்தரது மனதில் மிக்க மதிப்பை உண்டாக்கியது.

கோவிந்தர் மரத்திலிருந்து இறங்கி நீராடச் செல்லும்போது பெரிய திருமலைநம்பி அவரிடம், ''நீர் யாரை வழிபட மலர்கள் கொண்டு செல்கிறீர்'' என வினவினார். கோவிந்தர், ''சிவ வழிபாட்டுக்கு'' என பதிலுரைத்தார். உடனே நம்பி ''கொன்றைச் சடையானை குளிர நீராட்டினால் என் உனக்குண்டாகும்பயன்'' என்று ஒரு பாசுரத்தை மட்டும் சேவித்தார். கோவிந்தர் ஒரு முறை திருமலைநம்பியை ஏறிட்டு நோக்கிவிட்டு, குடத்தில் அபிஷேக ஜலத்துடனும், மலர்களுடனும் காளத்திநாதன் கோவிலை நோக்கி விரைந்தார்.

பெரியதிருமலைநம்பி ''வித்து ஊன்றியாகிவிட்டது, முளைக்கட்டும். பிறகு வருவோம்'' என்று திருமலைக்குத் திரும்பிவிட்டார். இரண்டாவது முறை சிலநாட்கள் கழித்து அவர் மறுபடி காளஹஸ்திக்கு சென்றார். அங்கு நேரத்தை வீணாக்காமல் ஆலமரத்தடியில் அமர்ந்து திவ்யப்ரபந்த காலக்ஷேபம் ஸாதிக்கலானார். அப்போது அபிஷேக ஜலம் கொண்டு போக

அங்கு வந்த கோவிந்தனைப் பார்த்துவிட்ட பெரியதிருமலைநம்பி, ஒரு ஓலையில் ஆளவந்தாரின் ஸ்லோகமொன்றை எழுதி கோவிந்தன் வரும் வழியில் போட்டு வைத்தார். கோவிந்தனும் அந்த ஓலையை குனிந்து எடுத்து, வாசித்துவிட்டு, பிறகு அந்த இடத்திலேயே போட்டுவிட்டு குளத்தை நோக்கிச் சென்றார். அபிஷேக ஜலம் மொண்டு திரும்பி வரும்போது சிந்தனை வசப்பட்டு தீவிரமாக இருந்தார். மறுபடியும் ஓலையைப் எடுத்துப் படித்து பிறகு பெரியநம்பியிடம் வந்து, "நீங்கள் நழுவவிட்ட பொருள் இதுவோ' எனக் கேட்டார். பெரியநம்பி அவரிடம் புன்முறுவலுடன் பேசத் தொடங்கி, இருவரும் பரதத்வத்தைப் பற்றியும், செல்லவேண்டிய மார்க்கத்தைப் பற்றியும் வெகுவாக விவாதம் செய்தனர். கடைசியில் கோவிந்தர் வைணவ நெறியைத் தழுவினார். பெரியதிருமலைநம்பி அவருக்கு தீக்ஷை செய்வித்தார். பிறகு கோவிந்தர் ராமானுஜரை அடைந்து அவருடனேயே வாழலானார்.

வரும் இதழில் ராமானுஜரை ஒழித்துக்கட்ட திட்டமிட்ட அவரது குரு யாதவப்ரகாசர் எங்ஙனம் ராமானுஜரது சீடரானார் என்ற கதையைப் பார்ப்போம்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

அறிவிப்பு :

1. இதுவரை மதுரமுரளியில் வெளிவந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் கேள்வி பதில்கள், "ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள்" என்ற தனி புத்தகமாக வெளி வந்துள்ளது.

   விலை ரூ. 20/-. சென்னை 'ப்ரேமிகபவன'த்தில் கிடைக்கும்.

2. மதுரமுரளி நான்காண்டு இதழ்கள் தனிபாகங்களாக வெளிவந்துள்ளன.

   a. July '95 - Aug '96 b. Sept '96 - July '97

   c. Aug '97 - July '98 d. Aug '98 - July '99

   இவை சென்னை ப்ரேமிக பவனத்தில் கிடைக்கும்.

# மனஇறுக்கம் - 2

- ஸ்ரீ ஸ்வாமிகள்

உடலியல் ரீதியாக ஒருவருக்கு நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவாக இருக்குமேயானால் அவர் அடிக்கடி நோயினால் அவதிப்படுவதை காணலாம். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் வெற்றி, தோல்வி, சுகம், துக்கம், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள் போன்றவைகள் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது. நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்கள் சரீர வியாதிகளால் எங்ஙனம் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்களோ, அதுபோல் வாழ்க்கையில் ஏற்படும் சுகம், துக்கம், வெற்றி, தோல்வி, எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள் போன்றவைகளை தாங்குவதற்கான மனோபலம் இல்லாதவர்கள், மனஇறுக்கத்தில் அடிக்கடி பாதிக்கப்படுகின்றார்கள். சரியான தெய்வீக வாழ்க்கைதான் இதற்கு மருந்தாகும்.

மனோபலம் இல்லாதவர்களை மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம் போன்றவற்றினால் சுலபமாக வசப்படுத்தமுடியும். மனோபலம் உள்ளவர்களை மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம் போன்றவற்றினால் வசப்படுத்துவது அவ்வளவு சுலபமல்ல. அதுபோல், சிலர் நாமகீர்த்தனம் என்ற பெயரில் நவீன இசைக்கருவிகளை உபயோகப்படுத்தி, நவீன ராகங்களில் பல பாடல்களை பாடும்பொழுது அதைக் கேட்டு பலர் பரவசமாகி கண்களில் கண்ணீருடன் காணப்படுவதைக் காணலாம். இவைகள் பக்தியினால் அல்ல. இவைகளும் ஒருவிதமான மனோவசியமே.

நன்றாகப் புரியும்படி சொல்லவேண்டுமென்றால், இன்று நவீன பாப் இசை பாடகர்களும், ராக் இசைப் பாடகர்களும் பாடும்பொழுது பலர் அங்கு கூடி ஆடுவதும், பாடுவதும், கண்ணீர் வடிப்பதும் எப்படி பக்தியினால் இல்லையோ, அதுபோல்தான் இதுவும். இதற்கும் பக்திக்கும் எந்தவித ஸம்பந்தமுமில்லை. நாமஸங்கீர்த்தனம் என்பது மஹான்கள் காட்டிய வழியில் இருத்தல் வேண்டும். ஶரீர பலமுள்ளவன் எங்ஙனம் ஶரீர பலமில்லாதவனை அடக்கி ஆள்கின்றானோ, அதுபோல் மனோபலமுள்ளவன் மனோபலமில்லாதவனை அடக்கி ஆள்வான். தியானம் என்ற பெயரில் வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பது, கண்ணாடியைப் பார்ப்பது, கறுப்புப் புள்ளியையோ, மின்சார விளக்குகளையோ உற்று நோக்கிக் கொண்டிருப்பது இவைகளினால் மனது Self Hypnotise ஆகிவிடும்.

தியானம் என்பது எப்படி செய்யவேண்டும் என்பதை குருவிடமிருந்து நேரடியாகத் தெரிந்துகொண்டு, அதில் சிறிதும் compromise செய்யாமல் strictஆக அதன்படியே செய்யவேண்டும். தகுந்த குரு கிடைக்கும் வரை ஹரிநாமத்தை விடாது சொல்லிவருதல் எல்லோருக்கும் பொதுவான, ஒரு ஆபத்தில்லாத வழியாகும்.

மனஇயல் ரீதியாக, பெண்களின் மனது, சுலபத்தில் வசப்படக் கூடியது. ஆகவேதான், நம்மதத்தில், பெண்களை கலந்து பழகுவதற்கு அனுமதிப்பதில்லை. பெண்கள் புருவத்தின் மத்தியில் இட்டுக்கொள்ளும் குங்குமமும், கண்களில் இட்டுக் கொள்ளும் அஞ்சனமும் அவர்களை மேற்படி வசியப்படுத்தக்கூடியவரிடமிருந்து பாதுகாக்கும். (குங்குமமும், அஞ்சனமும் பழைமையான முறைப்படி செய்ததாக இருக்கவேண்டும்) இன்று பல ஆஶ்ரமங்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், இளம் பெண்கள் வாழ்க்கையைத் துறந்து ஆன்மிக ஸாதனைகள் செய்து வருவதாகச் சொல்வதை கேள்விப்படுகின்றோம்.

ஸாக்ஷாத் தக்ஷிணாமூர்த்திக்கே நான்கு சிஷ்யர்கள்தான் இருந்தனர். ஆதிசங்கர பகவத்பாதாளுக்கும் நான்கு சிஷ்யர்கள்தான் இருந்தனர். இயேசு கிறிஸ்துவுக்கும் 12 சீடர்களே ப்ரதானமாக இருந்தனர். ஒரு மஹானை பல கோடிக்கணக்கான ஜனங்கள் தரிசனம் செய்வது இயல்பு. அவரிடம் பக்தி கொண்டிருப்பதும் இயல்பு. குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டே அவருடைய உபதேசங்களை கடைப்பிடிப்பது இயல்பு. அது எப்படி இன்று நூற்றுக்கணக்கான பேர் சில ஸ்வாமிஜிகளை பார்த்தவுடன் வாழ்க்கையைத் துறந்து காவி கட்டுகின்றனர் என்பது புரியவில்லை! இது இயல்புக்கு புறம்பானது. யுக்தி பூர்வமாக இதை ஏற்க முடியவில்லை.

ஆனால், ''அப்படி ''ஆன்மீக ஸாதனைகளில்'' ஈடுபட்டிருப்பவர்கள் உண்மையில் லௌகீக விஷயங்களில் ஈடுபடவே மாட்டார்கள். அப்படி இருக்கையில் அவர்களை எப்படி குறை கூற முடியும்'' என்று உங்களுக்கு தோணலாம். அரை மயக்க நிலையில் உள்ளவன் எப்படி செயல்படுவானோ அப்படித்தான் இவர்களும் இருக்கிறார்கள். அதே ஸமயத்தில், சரியான ஸாதனை மார்க்கத்தில், தீவிரமாக ஈடுபடவும் இவர்களால் முடியாது. இவர்கள் பலமணி நேரம் தியானத்தில் உட்கார்ந்திருப்பதுபோல் தோன்றுவது உண்மையல்ல. இது ஒரு மாதிரியான மயக்க நிலையே. இவர்களுடைய மனது ஒரு பரவசமான நிலையில் எப்பொழுதும் இருக்கும்.

இவர்களும் தியானத்தில் பல தெய்வீக காட்சிகளை பார்த்தேன் என்று கூறுகிறார்களே, ஒளியைக் கண்டேன் என்று கூறுகிறார்களே, போன்ற ஸந்தேகங்கள் உங்களுக்கு எழலாம். இதெல்லாம் உண்மையா? அல்லது கற்பனையா என்ற ஸந்தேகங்கள் அவர்களுக்கே எழுவதும் உண்டு. ஒரு குடும்பத்தில் முன்னோர்கள் யாருக்காவது மனவியாதிகள் இருக்குமானால், அவர்களுடைய வாரிசுகளுக்கும், நரம்புத் தளர்ச்சி உள்ளவர்களுக்கும், ஸதா ஏதோ ஒரு சிந்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும், உடம்பை வருத்தி சரியாகச் சாப்பிடாமலும், தூங்காமலும் இருப்பவர்களுக்கும், ஏதாவது பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் ஆழ்ந்த தூக்கமென்பது வராது. ஆகவே இவர்களுடைய ஶரீரம் தூக்கத்தை விரும்புகிறது. மனதோ ஆழ்ந்த தூக்கத்திற்கு செல்ல மறுக்கின்றது. இடைப்பட்ட நிலையில் இருப்பதை இவர்கள் தியானம் செய்வதாக தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.

ஒருவர் ஒரே நேரத்தில் இரண்டு அவஸ்தையில் இருக்கமுடியும். உதாரணமாக, ஒருவர் தூங்கிக்கொண்டிருப்பதாக நினைக்கிறோம். ஆனால் அவர் கனவு கண்டுகொண்டு இருக்கலாம். தூக்கத்தில் நடக்கும் வியாதியில் இருக்கும் ஒருவனுக்கு தூக்கமென்ற அவஸ்தையும், விழிப்பு என்ற அவஸ்தையும் எப்படி ஒரே நேரத்தில் இருக்கின்றனவோ அது போலவே இது மாதிரி மனஇறுக்கம் உள்ளவர்களுக்கு விழிப்பு என்ற அவஸ்தையும், கனவு என்ற அவஸ்தையும் ஒரே நேரத்தில் ஏற்படுவதுண்டு. நாம் நம்முடைய கனவுகளில் எப்படி ஸம்பந்த, ஸம்பந்தமில்லாத காட்சிகளை காண்கின்றோமோ அதுபோலவே இவர்களும் தியானத்தில் பல ஸம்பந்த, ஸம்பந்தமில்லாத காட்சிகளை காண்கின்றார்கள்.

மிகவும் அரிதாக, நமது கனவுகளில் ஒன்றிரண்டு பலிப்பதுமுண்டு. அதுபோல், இவர்களுடைய காட்சிகளில் ஸமயத்தில் ஒன்றிரண்டு பலிதமாவதும் உண்டு. ஆகவே இவர்கள் உண்மையா, பொய்யா என்று புரியாத ஒரு குழப்பமான மனநிலையில் இருக்கின்றார்கள். நிஜ வாழ்க்கைக்கும், கனவு வாழ்க்கைக்கும் ஸம்பந்தப்படுத்தமுடியாத ஒரு நிலையே ஒரு Emotional Imbalance ஆகும்.

நமக்கு ஒரு தெய்வீக காட்சி ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். நாம் ஒரு ஸ்வாமி முன்நின்று, நமக்கு ஏற்பட்டிருக்கும் இறைக்காட்சி நிஜமென்றால் மேலே இருக்கும் பூ கீழே விழ வேண்டுமென்று நினைத்து, அது கீழே விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் அது

இயற்கையை ஒட்டி நடக்கக்கூடிய ஒரு விஷயமாகும். உண்மையான இறைக்காட்சி ஏற்பட்டிருக்குமானால் கீழே உள்ள பூ மேலே செல்ல வேண்டும். நான் ஒன்றும் மிகைப்படுத்தி சொல்லவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு முதன்முதலாக தேவியின் தரிசனம் கிடைத்தது. தனக்கு ஏற்பட்டது உண்மையான இறைக்காட்சியாக இருக்குமானால் தேவியின் பக்கத்தில் உள்ள கத்தியானது மூன்று முறை குதிக்கட்டும் என்று அவர் வேண்டிக்கொள்ள, அது அப்படியே நடந்தது. நமக்கு ஏற்படும் இறைக்காட்சிகளை இந்த அளவிற்கு ஐயமற தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

தெய்வீக வாழ்க்கையில் ஈடுபட்டதாலேயே மனோவியாதிகளால் பீடிக்கப்படுகின்றார்கள் என்ற ஒரு பொதுவான அபிப்ராயம் மக்கள் பலர் மத்தியில் நிலவுவதை நாம் காணலாம். உண்மை அதுவல்ல. மனோவியாதியினால் பீடிக்கப்பட்டவர்களும் ஸமூகத்தில் பலதரப்பட்ட நிலையிலுள்ளவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்களில் ஏற்கனவே மனோவியாதியால் பீடிக்கப்பட்டவர்கள், தெய்வீக வாழ்க்கையில் ஈடுபடும்பொழுது, அவர்களுக்கு மனோவ்யாதி போன்றவைகள் அதிகரிப்பதற்கான ஸந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன என்பதை நாம் மறுக்க முடியாது. காரணம் என்னவென்றால், இவர்களோ ஏற்கனவே மனோவ்யாதிகளால் பீடிக்கப்பட்டவர்கள். தெய்வீக ஸாதகர்களின் சரித்ரங்கள் பலவற்றில் அமானுஷ்யமான விஷயங்கள் பல சித்தரிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே குழம்பியுள்ளவர்களுக்கு மேலும் குழப்பிக்கொள்ள பல ஹேதுக்கள் இவைகளில் அமைந்து விடுகின்றன.

ஒருவர் தியானம் பழக ஆரம்பிக்கும் காலத்தில் 20 நிமிடங்களுக்கு மேல் தியானத்தில் அமர்வது மிகவும் சிரமம். காமம், கோபம் போன்றவைகள் எல்லாம் பலவருட தீவிரமான ஸாதனைகளுக்குப் பிறகே தணிய ஆரம்பிக்கும். இதுதான் இயற்கை. ஒருவனுக்கு தியானம் பழக ஆரம்பித்தவுடனே பல மணி நேரம் தியானத்தில் அமரும் ஸாமர்த்தியம் ஸித்திக்குமானால், அவர் ஜன்மாந்திரத்தில் யோகப்ரஷ்டனாக இருந்திருக்க வேண்டும், அல்லது தியானம் என்ற பெயரில் தவறான வழியில் செல்பவராக இருக்கவேண்டும். நாம் செய்யும் தியானம் தவறா, சரியா என்பதை உத்தம குருவின் துணையைக் கொண்டே அறிந்துகொள்ள வேண்டும்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை - 20

**- ஶ்ரீ ஸ்வாமிகள்**

ஒரு கிராமத்தில் மிகப்பெரிய தனவந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரிடம் ஏராளமான செல்வமும் நிலங்களும் இருந்தன. அவர் யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டார். அதிலும் ஸாதுக்கள், ஸந்யாசிகள் போன்றோரைக் கண்டால் அவருக்கு ஸர்வதா பிடிக்காது. அந்த ஊரில் எல்லோரும் அவருடைய தன்மையைத் தெரிந்து, அவரிடமிருந்து விலகியே இருந்து வந்தனர்.



ஒரு ஸமயம், வெளியூரிலிருந்து வந்த ஸாது ஒருவர் இவருடைய தன்மை தெரியாமல், இவர் வசிக்கும் மாளிகைக்கு முன் வந்து பசிக்கு ஆகாரம் கேட்டார். அதைக் கண்டவுடன் தனவந்தருக்கு தாங்க முடியாத அளவிற்கு கோபம் வந்தது. அந்த ஸாதுவை பல தகாத வார்த்தைகளினால் திட்டி எவ்வளவு தூரம் அவமானப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் அவமானப்படுத்தினார். ஸாதுவும் மலர்ந்த முகத்துடன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் ஆசை தீர திட்டி முடிந்த பிறகும் கூட ஸாது அவரை பல விதத்திலும் ஸந்தோஷமாக ஆசீர்வதித்துவிட்டே அந்த இடத்தை விட்டுச் சென்றார்.

அந்த தனவந்தருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. நாம் இவ்வளவு தூரம் கோபப்பட்டும் கூட எவ்வளவு பொறுமையாக அந்த ஸாது இருக்கிறார். மேலும் அந்த நிலையிலும் நமக்கு ஆசீர்வாதமும் செய்கிறார். எப்படி அவரால் எப்படி இப்படி இருக்கமுடிகின்றது என்று அதிசயப்பட்டார். சிறிது நேரம் கழித்து அந்த ஸாதுவை தேடிச் சென்றார். ஸாதுவோ ஒரு மரத்தின் அடியில் அமர்ந்திருந்தார். ஸாதுவிடம், நான் உங்களை இவ்வளவு திட்டிய பிறகும் கூட எப்படி தங்களால் இவ்வளவு ஶாந்தமாக இருக்கமுடிந்தது என்று தனவந்தர் கேட்டார்.

அதற்கு அந்த ஸாது, தங்களிடம் பல குதிரைகள் உள்ளது என்று வைத்துக் கொள்வோம். அதை தாங்கள் எனக்கு தானமாக கொடுக்க விரும்புகின்றீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அந்த குதிரைகள் யாருக்குச் சொந்தம் என்று வினவினார். அதற்கு அந்த தனவந்தரோ, தாங்கள் அந்தக் குதிரைகளை ஏற்காவிடில், எனக்குத்தான் சொந்தம் என்றார். அதுபோல் தாங்கள் கோபப்பட்டு என்னை திட்டுகையில் அந்த வசைமொழிகளை எல்லாம் நான் ஏற்றுக்கொள்ளவில்லை, ஆகவே, அது யாருக்குச் சொந்தம் என்றார். தனவந்தரோ வெட்கி தலை குனிந்தார்.

அதுபோல், ஒருவர் நம்மை நிந்தை செய்கையில் அதற்குப் ப்ரதிவாதம் செய்தால் அவைகளை நாம் அங்கீகரிக்கின்றோம் என்று அர்த்தம். அவ்வாறு செய்யாமல் அவற்றை ஶாந்தத்துடன் பொறுத்துக் கொள்ளவேண்டும். ■

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 22

- நித்யாக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ **A. ஸுந்தரேஸ ஸர்மா வாஜபேயயாஜி**

## ரேவதி

பரமஸாத்வீக நக்ஷத்ரமாக ரேவதி நக்ஷத்ரத்தை கூறுவார்கள். வரத, அபய ஹஸ்தங்களுடன் ரத்ன ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்திருக்கும் பூஷா என்னும் தேவதையை கொண்ட நக்ஷத்திரம் இது. இந்த ரேவதி நக்ஷத்திரம் பெரிய மீன் போல் 12 நக்ஷத்ரங்களாக வானஸாஸ்த்ரக்ஞர்கள் அடையாளம் காட்டுகிறார்கள். மார்கழி மாதம் 16-ம் தேதி முதல் 27-ம் தேதி முடிய நக்ஷத்ர உதய காலத்தில் தலைக்கு நேராக ஆகாயத்தில் தெரிவதாக சொல்கிறார்கள். ரேவதி நக்ஷத்ர தேவதையான பூஷாவிற்கு பற்கள் கிடையாது. பரமேஸ்வரனை அழைக்காத தக்ஷனுடைய யஜ்ஞத்திற்கு ஹவிர்பாகத்திற்குச் சென்ற பூஷா, பூதகணங்களால் கன்னத்தில் அறையப்பட்டு பற்கள் விழுந்துவிட்டதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது. ஆகையால், ரேவதி நக்ஷத்ரயாகத்தில் ஹவிஸை புனர்பாகம் செய்து கஞ்சி போல் ஆக்கி அதை ஆஹுதி செய்யவேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. ரேவதி நக்ஷத்ரத்தில், பசுக்களது க்ஷேமங்களுக்கு உகந்தவைகளைச் செய்யலாம். ரேவதி நக்ஷத்ரத்தில் பிறந்தவர்கள் எந்தவிதமான அங்கக் குறையும் அற்றவர்களாக இருப்பார்கள். எல்லோரிடமும் மிகவும் பிரியமாக நடந்து கொள்வார்கள். ஸுத்தாத்மாக்களாக இருப்பார்கள். ஐஸ்வர்யம் மிக்கவர்களாகவும் இருப்பார்கள். அழகிய கண்கள் இவர்களுக்கு அமையும். படிப்பில் நாட்டம் கொண்டவர்களாக இருந்து ஸாஸ்த்ரங்களில் சூரர்களாக இருப்பார்கள். மாடு, கன்று சமர்த்தி இவர்களுக்கு உண்டு. வாகன வசதிகளும் இவர்களுக்கு அமையும். குழந்தைகளிடத்தில் அன்பு கொண்டவர்களாக இருப்பார்கள். இவ்வளவு இருப்பினும் இவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுதான் வாழ்க்கையில் முன்னேறுவார்கள். பலவித இன்னல்கள் இவர்களுக்கு இருக்கும். ஸூர்யனை அதிகமாக இவர்கள் உபாஸித்து மேன்மை நிலையை அடையலாம். ■


# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 47

பகவான் கிரிப்ரதக்ஷிணம் செய்து வரும் காலத்தில், அவர் ஸாக்ஷாத் ஸுப்ரமண்ய ஸ்வாமியின் அவதாரம் என்பதற்கு ப்ரமாணமாய் ஒரு ஸம்பவம் நடந்தது. வான்மண்டலத்திலிருந்து ஆறு கிருத்திகா நக்ஷத்திரங்கள் கீழிறங்கி அவர் நெற்றியைத் தொட்டுவிட்டு திரும்பிச் சென்றதை சிலர் பார்த்தனர். பகவான் இந்த மலையைச் சுற்றும்பொழுது மிக ஆச்சரியகரமான அனுபவங்கள் பல ஏற்பட்டுள்ளன.

திருப்புகழ் வள்ளிமலை ஸ்வாமிகள் என்ற மஹாத்மாவை, அறியாதவர்களே இருக்கமுடியாது. இன்று திருப்புகழ் பலராலும் பாடப்படுவதற்கு அவரே காரணம். வள்ளிமலை ஸ்வாமிகளுக்கு திருச்செங்கோடுதான் சொந்த ஊர். இவருடைய பெற்றோர்களுக்கு பல நாட்களாக புத்திர பாக்கியமே இல்லை. அவர்கள் திருச்செங்கோட்டில் கோவில் கொண்டுள்ள முருகனிடம் மிகவும் பக்தி கொண்டவர்கள். அவருடைய தாய், தகப்பனார், தங்களுக்கு ஸத்ஸந்தான ப்ராப்தி வேண்டி திருச்செங்கோடு முருகனை வழிபாடு செய்து வந்தனர். ஷஷ்டி உபவாசமும் இருந்து வந்தனர். முருகப்பெருமானின் அருளால் இவர்களுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. திருச்செங்கோட்டில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானின் பெயரான 'அர்த்தநாரி' என்ற பெயரையே தன் குழந்தைக்கு வைத்தனர்.

அதிபுத்திசாலியான அர்த்தநாரி, வாலிபப்பருவம் வந்தவுடன், மைசூர் மஹாராஜாவிடம் சிறிதுகாலம் சமையல்காரராக வேலைப் பார்த்து வந்தார். அச்சமயத்தில் வயிற்றில் இவருக்கு கடுமையான ரோகம் ஏற்பட்டது. ராஜவைத்தியம் செய்தும் இவருக்கு நோய் தீர்ந்தபாடில்லை. நோயின் வேதனையால் என்ன செய்வது என்று அறியாமல் தவித்து வந்தார்.

இப்படி இருக்கையில், ஒருநாள் அவருக்கு ஒரு அற்புதமான கனவு ஏற்பட்டது. அந்தக் கனவில் பழநி ஆண்டவர் தோன்றி, அர்த்தநாரியைப் பழனிக்கு வரும்படி உத்தரவிட்டார். மேலும் தான் கூறியபடி பழநிக்கு வந்தால் எந்த வைத்தியத்திற்கும் கட்டுப்படாத வயிற்றுவலி தீர்ந்துவிடும் என்று அருளி மறைந்தார். மறுநாள் காலை எழுந்தவுடன், தான் கண்ட



கனவை நினைத்து மகிழ்ந்து, பழநி யாத்திரையை மேற்கொண்டார். பழநியை அடைந்து பழநி ஆண்டவன் ஸந்நிதியில் நின்று அவரை தரிசித்து முருகனின் அபிஷேக தீர்த்தம் அருந்தினார். தீர்த்தம் அருந்தியவுடன் ஆச்சரியமாக அவருடைய வயிற்று நோய் தீர்ந்தது. அக்காலகட்டங்களில் எல்லா கோயில்களிலும் இறைவனுக்கு 16 விதமான உபசாரங்களுடன் பூஜை நடந்து வந்தது. அதில் நாட்டியமும் ஒன்று. ஒரு ஸமயம், வள்ளிமலை ஸ்வாமிகள் பழநி ஆண்டவன் ஸன்னதியில் இருக்கும் ஸமயத்தில், ஒரு தேவதாஸி, "வங்கார மார்பிலணி" என்ற ஒரு திருப்புகழை பாடி அபிநயம் செய்தார். பாடலின் பொருளையும் சுவையும் கண்ட ஸ்வாமிகள், அதனால் கவரப்பட்டு, இது யாருடைய பாடல் என்றெல்லாம் விசாரித்து திருப்புகழின் சுவையையும் பெருமையையும் அறிந்து மெல்ல மெல்ல எல்லாத் திருப்புகழையும் கற்றுக்கொண்டு விட்டார்.

பழநியிலேயே சிலகாலம் தங்கி இருந்தார். ஒரு கௌபீனம் மட்டுமே அணிந்து வைராக்ய சீலராகவே இருந்தார். மைசூர் ஸ்வாமிகள் என்ற திருநாமமும் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. கடுமையான ஸாதனைகளில் ஈடுபட ஆரம்பித்தார். சிறிது காலம் கழித்து பழநியிலிருந்து கிளம்பி, கதிர்காமம், திருச்செந்தூர், கோவில்பட்டி போன்ற க்ஷேத்ரங்களுக்கு எல்லாம் சென்று முருகப்பெருமானை தரிசித்து ஆனந்தமடைந்தார்.

ஆரம்ப காலகட்டங்களில் முருகப்பெருமான் யாரோ ஒருவர் போன்று இவர் முன் தோன்றி மறைந்தது உண்டு. சில காலம் கழித்து பழநி ஆண்டவனின் தரிசனமும் இவருக்குக் கிடைத்தது. பகவானை தரிசனம் செய்யும் பொழுது ஆனந்தம் ஏற்பட்டபோதிலும், பகவானின் மறைவால் துக்கமடைந்த ஸ்வாமிகள், என்றும் வழுவாத தரிசனத்திற்கு ஆசைப்பட்டார். ஆனால் அதற்கான வழியை அறிந்தாரில்லை.

கோவில்பட்டியில் ஒருவர் திருவண்ணாமலையில் ஒரு ஜீவன்முக்தர் உள்ளதாகவும், அவரைச் சென்று ஶரணாகதி அடையும்படியும் இவரைப் பணித்தார். அதைக் கேட்டவுடன், திருவண்ணாமலை செல்ல ஆவல் கொண்டு யாத்திரையாக திருவண்ணாமலை வந்தடைந்தார். நம்முடைய பகவானோ எப்பொழுதும் வெள்ளை கௌபீனமே தரிப்பவர். தலையும் மொட்டை. எப்பொழுதும் கையில் ஒரு தடியும் வைத்திருக்கும் பழக்கம் உள்ளவர். தரிசனம் செய்த அர்த்தநாரி ஸ்வாமிகளுக்கு, பகவான் பழநி ஆண்டவனாகவே காட்சியளித்தார்.

(தொடரும்)

श्री हरि:

## குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்

சென்னை - 600 083.

## மதுரமுரளி வருடசந்தா - Reminder

1995 ஜூலை முதல் கடந்த நான்கு ஆண்டுகளாக மதுரமுரளி தங்களை ஆன்மீக பாதையில் உயர்த்தி வருகின்றது என்பது தாங்கள் அறிந்ததே. இவ்வுயர்வு மேலும் மேலும் முதிர்வடைந்து குருவின் ஆசியால் நம் பிறவி பயனை அடைய மதுரமுரளி தங்களையும் தங்களை சேர்ந்த உறவினர்களையும், நண்பர்களையும் ஆன்மீக பாதையில் அழைக்கிறது. ஆகையால், நம் மனித பிறவி கடைத்தேற, குருவின் ஆசியும் அன்பும், நம்மை ஆட்கொள்ள, விரைவிலேயே சந்தாதாரராக இருப்போர், தங்களது ஆண்டு சந்தாவையும், புதிதாக அடி எடுத்து வைப்போர், தங்களது முதலாண்டு சந்தாவையும் அனுப்பி வைத்து குருவருளும், திருவருளும் பெற வேண்டுகிறோம்.

**வருட சந்தா - உள்நாடு Rs. 60/- வெளிநாடு Rs. 300/-**

***"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்"*** என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDஆக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் **உடனே** அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
திரு. V. சங்கரன், மதுரமுரளி,
5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே.நகர், சென்னை - 600 078. Phone : 4714327

---

(இதை பூர்த்தி செய்து அனுப்பவும்)

சந்தா எண் : ____________ பெயர் : ____________

முகவரி : ______________________________

______________________________

Pin Code : ____________

காசோலை / DD எண். : ____________ வங்கி பெயர் : ____________

தேதி : ____________ கையொப்பம் : ____________

ஜூன் 11-ந் தேதி மாலை 6 மணி

சென்னை அசோக்நகர் ஸ்ரீ க்ருஷ்ணன் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற நாமஸங்கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

ஜூன் 12-ந் தேதி மாலை 6 மணி

சென்னை மயிலாப்பூர் சாந்திநிகேதன் ஸ்ரீ V. பாலகுமாரன் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற திவ்யநாமத்தில் நம் ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

ஜூன் 12, 13-ந் தேதிகள்

சென்னை மேலமாம்பலம் ஸ்ரீ A.G.S. முரளீ அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற அஷ்டபதி பஜனை மற்றும் ராதா கல்யாண வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

ஜூன் 13-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஜயேந்த்ரன் பாகவதர் அவர்களின் பஜனை நடைபெற்றது.

ஜூன் 23-ந் தேதி

சென்னை மேலமாம்பலம் ஸ்ரீ A.G.S. முரளீ அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற திவ்யநாமத்தில் நம் ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

ஜூன் 24-ந் தேதி - ஏகாதசீ

சென்னை விருகம்பாக்கம் ஸ்ரீ மோஹன் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற திவ்யநாமத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

ஜூன் 26, 27 தேதிகள்

சென்னை தி.நகர், பாண்டிபஜார் புவனேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவ வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.


மங்களானி பவந்து

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

வேணு : 4 | ஜூலை 1999 | கானம் : 12


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar